முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.
முன்னிலை - திரு.ஜி.அசோக் பிரசாத், B.A., B.L., M.S.E.N.,
முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
2025 ம் வருடம் நவம்பர் மாதம் 10 ம் நாள் திங்கள்கிழமை
(திருவள்ளுவராண்டு 2056 – விசுவாவசு வருடம் - ஐப்பசி திங்கள் 24 ம் நாள்)
இடைநிலை மனு எண்.7/2025
அசல் வழக்கு எண்.1004/2021

ஆர்.குணசேகரன். ..மனுதாரர்/பிரதிவாதி

// எதிர் //

சி.நல்லசாமி. ..எதிர்மனுதாரர்/வாதி

09.09.2025 தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151ன்படி மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரரை நீதிமன்றத்தின் முன்னிலையில் கைரேகை செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இன்று இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் திரு. எஸ்.ஸ்ரீரவிச்சந்திரபிரபு, வழக்கறிஞர் அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.கே.சிவானந்தம், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## உத்தரவு

மனுதாரரை நீதிமன்றத்தின் முன்னிலையில் கைரேகை செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு உரையின் சுருக்கம் பின்வருமாறு:

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. எதிர்மனுதாரரான வாதி

மனுதாரருக்கு எதிராக மோசடியான கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் தொகை வசூல் செய்ய அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா கடனுறுதிச் சீட்டை மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எழுதித் தரவில்லை, மோசடியானது. 16.02.2020 தேதிய தாவா கடனுறுதிச் சீட்டு உண்மைக்குப் புறம்பானது, பொய்யானது. மேற்படி ஆவணமானது எதிர்மனுதாரர் மற்றும் அவருடைய நண்பர்கள் சேர்ந்து பொய்யாக கையொப்பமும் கைரேகையுமிட்டு அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா கடனுறுதிச் சீட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை இந்த மனுதாரரின் கையெழுத்து அல்ல. அது மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது. மனுதாரின் கைரேகையை கடனுறுதி ஆவணத்துடன் உள்ள கைரேகையை ஒப்பீடு செய்ய Forensic Department, Chennai க்கு அனுப்ப உத்தரவிட வேண்டுமென்றும், மனுதாரர் நீதிமன்றத்தின் முன்னிலையில் கைரேகை செய்ய அனுமதிக்கவேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர் தரப்பில் எதிர் உரை இல்லை என்றும், மனுவை அனுமதிக்க ஆட்சேபனை இல்லை என்றும் மேற்குறிப்பி செய்யப்பட்டுள்ளது.

4) இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5) <u>பிரச்சினைக்குத் தீர்வு</u>

மனுதாரர் தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரரான வாதி கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பில் தாவா கடனுறுதிச் சீட்டு மோசடியானது என்றும், தாவா கடனுறுதிச் சீட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்றும், எனவே, தாவா கடனுறுதிச் சீட்டில் உள்ள கையெழுத்துடன் பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஆவணங்களில் உள்ள கையெழுத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க ஆவணங்களை ஆணையர் மூலம் கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுவை அனுமதிக்க ஆட்சேபனை இல்லை என்று கூறியுள்ள போதிலும், அசல் வழக்கானது கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், கடனுறுதிச் சீட்டில் உள்ள கையெழுத்து

தன்னுடையதல்ல என்றும், தன்னுடைய கையெழுத்து மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் கூறியுள்ளதை பரிசீலித்தும், மனுதாரர் மனுவில் கூறியுள்ளபடி மனுதாரரின் ஒப்புக் கொள்ளப்பட்ட கையெழுத்துடன் தாவா கடனுறுதிச் சீட்டை ஒப்பிட்டுப் பார்க்க கையெழுத்து நிபுணரின் அறிக்கைக்கு அனுப்புவதால், எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்றும், எனவே, நீதி நலன் கருதி மனுவை அனுமதிப்பதென்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக,

இந்த மனுவை அனுமதித்து. மனுதாரர் இன்றிலிருந்து ஒரு வாரத்திற்குள் நீதிமன்றத்தின் முன்னலையில் உபயவாதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் முன்னிலையில் தன்னுடைய கையொப்பம் மற்றும் கைரேகையை இடவேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025ம் வருடம் நவம்பர் மாதம் 10ம் நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

G ASHOK PRASATH Digitally signed by G ASHOK PRASATH

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
ஈரோடு.

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>

(இருதரப்பிலும்.... தாக்கல் இல்லை)

G ASHOK PRASATH Digitally signed by G ASHOK PRASATH

முதல் கூடுதல் சார்பு நீதிபதி,
ஈரோடு.

அசல்/வரைவு உத்தரவு
இ.ம.எண்.7/2025
அ.வ.எண்.1004/2021
நாள் 10.11.2025
மு.கூ.சா.நீ.ம., ஈரோடு.